[1982 மார்ச் 3

தீண்டாமை ஒழிப்புப் பற்றி செய்திப்படம் தயாரிக்கும் திட்டம்.

*வினா எண். 679—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்பு சினிமாப்படம் தமிழக அரசு செய்தி நிறுவனத்தின் மூலம் தயாரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எம் விஜயசாரதி ஆம். தீண்டாமைக் கொடுமைகள் குறித்து செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை மூலமாக செய்திப்படம் தயாரிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் இந்தப் படம் தயாரிக்கப்படும், கதைகள் தேர்வு செய்யப்பட்டுவிட்டதா, நடிகர், நடிகைகள் தேர்வு செய்யப்பட்டு விட்டனரா, என்பதோடு, அரசியல் கட்சித் தலைவர்கள் இந்தத் தீண்டாமை படத்தில் வரும்போது விளக்க உரை ஆற்ற இடம் பெறுவார்களா ? என்னைப்போன்றவர்கள் இனாமாக நடித்துக் கொடுப்பதற்கு இந்தப் படத்தில் அனுமதிப்பார்களா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் படத்தினைத் தயாரிப்பதற்கு 1.16 இலட்சம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு ஆகக் கூடிய செலவில் பாதியை மைய அரசு ஏற்றுக்கொள்ளுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நடிப்புத் திறமை இருக்குமானால் அவருடைய நடிப்புத் திறனை அந்தப் படத்தை இயக்குகின்ற இயக்குநரிடம் நிரூபிப்பதற்கேற்ப அவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

திரு. மு. ப. முனுசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இனாமாக நடிக்க வருகிறேன் என்று சொன்னார்கள். அவர் இவ்வளவு நாளும் இந்தத் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அமைச்சருக்குத் தான் போட வேண்டும். உறுப்பினர்களுக்கு அல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தொட்டால் தீட்டு என்பதுதான் தீண்டாமையின் விஷ வித்தாகும், தாழ்த்தப்பட்ட மக்கள் தானியங்களை உற்பத்தி செய்யும்போது அதை மற்றவர்கள் தொடாவிட்டால் என்னவாகும் என்பதையும். மருத்துவமனையில் உயிருக்குப் போராடும் நோயாளிக்கு இரத்தம் கொடுக்கும்போது தீண்டாமை பின்பற்றப்படுவதில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனி குரூப் இரத்தம் இல்லை. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிசீலனையில் இருக்கிறது என்று ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் பதில் கூறிவிட்டார்கள்.

1982 மார்ச் 31]

நன்செய் நிலங்களில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம்.

*வினா எண். 680—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புஞ்செய் நிலத்தில் இருந்து ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதோடு நஞ்செய் நிலத்திலும் மனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்குவதற்காகவோ அல்லது பிற காரியங்களுக்காகவோ உணவுப் பயிர்கள் பயிரிடப்படும் நன்செய் நிலங்கள் அல்லது தோப்பு நிலங்கள் கையகப்படுத்தக்கூடாது என்பது இந்த அரசின் கொள்கை. ஆயினும், வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்குவதற்கு நன்செய் நிலங்களைக் கையகப்படுத்துவது தவிர்க்க இயலாதது என்று மாவட்ட ஆட்சியர் கருதினால் அரசின் முன் அனுமதி பெற்று நன்செய் நிலங்களை கையகப்படுத்த முன் மொழிவுகள் அனுப்பும்போது அவைகள் ஆய்வு செய்யப்பட்டு ஆணைகள் இடப் படுகின்றன.

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சட்ட நூல்கள்.

*வினா எண் 667—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இதுவரையில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சட்ட நூல்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி, தமிழ்நாடு சட்டத் துறை ஆட்சிமொழி ஆணையம், 152 மத்தியச் சட்டங்களையும் 46 மாநிலச் சட்டங்களையும், ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றது. இவற்றில், 16 மத்தியச் சட்டங் களும் 4 மாநிலச் சட்டங்களும் அச்சடிக்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கின்றன.

[முற்பகல் 10–10)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சட்டங்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்படுகிறபோது, அந்த மொழிபெயர்ப் புக் குழு அந்தச் சட்டங்களை அப்படியே வெளியிட்டுவிடுவதாக